9 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்.
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 16-2-33

சிலந்தியின் அழைப்பு



மூன்று வட்டமேஜைகளிலும் சுழிபோட்ட பிரிட்டிஷ் சர்க்கார் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி என்ற இன்னொரு வலையைப் பின்னி அதற்குள் வருமாறு இந்திய மிதவாதிகள் என்ற கும்பலை அழைக்கின்றார்கள். "என் வீடு வெகு அழகாக உளது. வந்திருந்து விருந்துண்டு நீங்கள் சுகமடையலாகாதா?" என்று ஜான்புல் சிலந்தி அழைக்கின்றது. அதற்கு மிதவாத ஈக்கள் செவி சாய்க்கலாமா?

இந்தப் பல்லவி வேண்டாம்

சிறை புகுவது பொழுது போக்கா, அல்லது தொழிலா? அபராதம் தருவது மதக் கடமையா, அல்லது பித்தமா? தடியடிகளை வாங்க வேண்டு மென்பது தலை யெழுத்தா? என் காங்கிரஸ் வீரர்கள் சட்ட மறுப்பு இயக் கத்தில் ஈடுபட்ட வண்ணமே யிருந்து வருகின் றனர்? இதன் பொருளை சிமையில் வெள்ளை மாளிகைக்காரர்களோ, டெல்லியில் வைஸ்ரா யின் கோஷ்டியோ அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அல்லது அறியாதவர் போலவே காட்டிக் கொள்கிறார்களோ என்னவோ?

“மீண்டும் சட்ட மறுப்பு இயக்கம் தோன் றுது என்பதற்கான அத்தாட்சிகள் ஏற்படாத வரை காந்திஜியையும் இதரர்களையும் விடுதலை செய்ய முடியாது” என்று ஸாமுயேல் ஹோர் பார்லிமெண்டில் கூறியிருக்கிறார். இந்த ஆட்சி முறையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத் தோடுதான் காங்கிரஸ் வீரர்கள் இந்த சத்யாக்ர கத்தியில் பாய்ந்தார்கள். ஆகவே எந்த நிமிஷத் தில் இந்தியர்களுக்கு நன்மை பயக்கும் ஆட்சி முறை தோன்றுகின்றதோ அதே சமயத்தில் ‘சட்ட மறுப்பு’ என்ற எண்ணமும் தானுகவே ஓடி யொளிந்து விடுமன்றோ!

சென்ற வருடத்தில் சத்தியாக்கிரக யுத்தம் தொடங்கப்பட்டதற்கு யார் காரணம்? வில்லிங் டனு, அல்லது காந்திஜியா? இந்த விஷயத் தைப் பற்றிப் பேசுகையில் டெல்லி சட்ட சபையில் ஹோம் மெம்பரான ஹெயிக் உளறிக் கொட்டினார். பொது ஜனங்களின் ஞாபக சக்தி அவ்வளவு கேவலமானதன்று. மேலும் காங்கிரஸின் தற்கால காரியதரிசியான டாக்டர் ஸையத் மகமத் இவ்விஷயத்தை விவரித்து ஓர் அறிக்கையும் விடுத்திருக்கிறார்.

1931ம் ௵ டிஸம்பர் ௴ 29ம் தேதியன்று வைஸ்ராயின் பேட்டியை வேண்டி காந்திஜி ஓர் தந்தி யடித்ததற்கு வைஸ்ராய் மறுக்கவே சத்தியாக்கிரகமும் ஆரம்பித்தது. இந்த சரித் திரத்தை என்னதான் செப்பிடு வித்தையாகப் பேசினாலும் மறைக்க முடியுமா?

காரணத்தைக் கொண்டே காரியம் என்பர். சட்ட மறுப்பு தொடங்குவதற்கு யார் காரணஸ் தர்களோ அவர்கள் வியாதிக்குத் தக்க மருந் தைத் தர வேண்டுமே யன்றி “விடுதலை யில்லை; விடுதலை தர மாட்டோம்” என்ற பல்லவியை அடிக்கடி பாடுவதில் அர்த்தமே யில்லை.

அத்தைப் பாட்டி சபை

அத்தைப் பாட்டி சபையென்றே தற்போது ள்ள டெல்லி சட்ட சபையைக் கூற வேண்டும். ஏனெனில் தற்போது அங்கு வாதிக்கப்பட்டு வரும் விஷயங்கள் ஏதோ பிள்ளை பெறுகின்ற தைப்பற்றியும், பெண்மர் சமாசாரமுமாக இருக் கிறதேயன்றி வேறில்லை. கல்யாணமானவர்கள் பிரிந்து கொள்வதற்கு ஓர் மசோதா; குழந்தை கள் கல்யாணத்தைப் பற்றி இன்னொரு ம்சோதா; நபும்ஸகர்களாகக் கணவர்கள் வாய்த் தால் ஸ்திரீகள் என்ன செய்ய வேண்டுமென் பதுபற்றி ஒரு மசோதா; இவ்வாறு எல்லாம் புது தினுஸிலேயே இருக்கின்றன.

இதே சட்ட சபையில் பண்டித மோதிலால் நேருவும், பண்டித மாளவியாவும், விதல்பாய் படேலும் இருந்து கர்ஜித்தபோது சட்டசபை குமுறிக் கொண்டிருந்தது. குள்ளத்தனமான பிரேரணைகள் ஒருபோதும் வந்ததேயில்லை. சபையைக் கவனித்துக் கொண்டிருப்பதும் சந்தோஷமா யிருந்தது. ஆனல் இப்போதோ இந்தச் சபை நடவடிக்கையைக் கவனிப்பது நரக வேதனையா யிருக்கின்றது. ஏதோ அத் தைப் பாட்டி கதைகளை இங்கு அங்கத்தினர்கள் படிக்கின்றனர்.

இவர்களது தீர்மானங்கள் போகின்ற ரீதியி லேயே இன்னும் சில தீர்மானங்களை அங்கத் தினர்களுக்கு சொல்லிக் கொடுக்கலாமென்று தோன்றுகிறது.

1. தண்ணீர் சேர்த்து நீர் மோர் கரைப்ப தைத் தடுக்கும் சட்டம்.
2. சில தாலூகா ஆபீசுகளில் ‘உக்கா’ பிடிப்பதைத் தடுக்கும் சட்டம்.
3. ரயிலில் பிரயாணம் செய்யும்போது வயல்களில் நின்று கொண்டு சில போக்கிரிகள் காலித்தனமாகச் சைகைகள் காட்டுவதுண்டு; அதைத் தடுப்பதற்காக அபாயச் சங்கிலியை இழுக்கலாமென்று ஓர் சட்டம்.
4. நாடகம், டாக்கி முதலியவை நடக்கும் கொட்டகைகளில் தும்முபவர்க்கு தண்டனை தர ஓர் சட்டம்.
5. வங்காளத்தில் ரஸகுல்லா தின்பதையும், சென்னையில் பச்சை மிளகாய் தின்பதையும் தடுப்பதற்காக ஓர் சட்டம்.

இப்படியாக சட்டசபை இன்னும் சில சட் டங்களைச் செய்தால் வெகு ரஸமா யிருக்கு மன்றோ!

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

ஒட்டை வாய் ஒட்வியர்

இந்தியாவில் எத்தகைய கிளர்ச்சி செய்ப வனையும் பீரங்கி முனையில் வேக வைத்து விட வேண்டுமென எண்ணுகின்ற கருணை வள்ளல் களில் ஸர் மைக்கேல் ஒட்வியரும் ஒருவர். இவ ரது ஒட்டை வாய் அவ்வப்போது விரிந்து எதையாவது உதிர்க்கும். இவர் 'மார்னிங் போஸ்டு' பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:

"மீரத் சதி வழக்கின் முடிவுகளினின்று இந்தியப் போலீசாரின் ராஜ பக்தியும், பக்ஷ பாத மில்லாத தன்மையும் தெரிகிறது. அவ் வாறு போலீஸ் இலாகா நடந்து கொள்ளுமாறு கண் காணித்து வருகிறவர்கள் ஏகாதிபத்திய அதிகாரிகள் ஆவார்கள். போலீஸ் இலாகாவை யும், கோர்ட்டுகளையும் இந்தியனுய்ப் பிறந்த ஓர் மந்திரியின் வசம் ஒப்புவித்து விட்டால், இத்தகைய 'வெற்றிகள்' கிடைக்க மாட்டா; பக்ஷபாதம் அதிகமாய் விடும்; பிரிட்டிஷ் அதி காரிகள் வேறிடங்களுக்குச் செல்ல நேரிட்டால் மேற்படி இலாகாக்களில் அக்ரமங்களும் அதிக மாகி விடும்."

போலீஸ் இலாகாவின் மீது இந்த ஒட்விய ருக்கு திடீரென சமுசயம் ஏற்படுவானேன்? பிரிட்டிஷார் மேற் பார்வை இல்லா விட்டால் 'சென்னை உஸ்மான் சாயபுவின் இலாகா' அநி யாயம் மிகுந்ததாய் விடும் என்று சொல்லு கின்ற ஒட்வியர் மித்திர பேதம் செய்ய விரும்பு கின்றாரா? அல்லது இந்தியப் போலீஸ் அதி காரிகளை குறை கூற விரும்புகின்றாரா? எப்படி யாயினும் போலீஸ் இலாகா நிரந்தரமாக டாம், டிக், ஹார்ரி கூட்டத்தின் கைகளிலேயே இருந்தாக வேண்டு மென்பதே மாஜி கவர்ன ரான ஒட்வியரின் முடிவு அல்லவா?

மீரத் சதி வழக்கின் முடிவைக் கண்டு இன்று உலகம் பூராவும் சிரிக்கிறது. யாரோ ஒரு முப் பது பெயர்கள் பொது வுடமைக் கொள்கை கொண்டிருந்ததற்காக, கடுமையான தண்டனை களை விதித்தது அநியாயத்திலும் அநியாயம். 3 வருஷம் 10 மாதம் விசாரணை; 637 சாட்சி கள்; 15 லக்ஷ ரூபாய்க்கு மேல் செலவு; இந்த வழக்கில் செலவிட்ட நேரத்தையும், பணத்தை யும் சர்க்கார் வேறு உபயோகம் உள்ள வழி களில் செலவழித்திருக்கலாம். ஆனால் ஒட் வியர் போன்ற ஒட்டை வாய்க் கூட்டத்துக்கு இந்தியப் பணம் எப்படிப் போனலென்ன? சுயராஜ்யப் போலீஸ் இலாகா பணத்தை இம் மாதிரி விரயம் செய்யவே செய்யாது.

சாப்ரு உபதேசம்!

அலகாபாத் சுதேசி பரிசளிப்பு விழாவில் சர் சாப்ரு பிறருக்கு உபதேசம் செய்யும் தொ ழிலை எடுத்துக் கொண்டார். "நாட்டில் வேலை யில்லாத் திண்டாட்டம் வதுத்து வருகிறது. இப்போது தற்காத்துக் கொள்ளா விட்டால் ஆபத்துதான். ஒவ்வொரு வருடமும் சுமார் 5,000 அல்லது 6,000 பேர் பி.ஏ., எம்.ஏ., பட்டம் வாங்கிக் கொண்டு கலாசாலைகளி னின்று வெளியேறுகின்றனர். அதில் பத்தில் ஒரு பங்கு பேருக்குக்கூட உத்யோகம் கிட்டுவ தில்லை. இது பரிதாபமாயில்லையா? எல்லா உத்யோகங்களையும் இந்திய மயமாக்க வேண்டு மென்று சொல்கிருர்கள். அம்முயற்சி பதினை ந்து வருடங்களில் பூர்த்தியடையலாம். அப் போது கூட நமது இளைஞர்களுக்கு விடிவப் போவதில்லை. ஏனெனில் என்ஜினியர், டாக்டர் முதலிய எந்தத் தொழிலிலும் கூட்டம் பலமா யிருக்கிறதே! ஆகவே சமூகத்தில் நடுநிலைமை யிலுள்ளவர்கள் வியாபாரத் துறையில் இறங்க வேண்டுமென ஆலோசனை கூறுகின்றேன்" என்று ஸாப்ரு சொன்னர்.

வியாபாரத்துறை எவ்வாறிருக்கிறது என்று ஸாப்ரு அறியார் போலும். மிகவும் அநுபவம் வாய்ந்த வியாபாரிகளுக்குக் கூட இப்போது நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. வியா பாரத்திலும் போட்டிக்குக் குறைவில்லை. எத் தனை வெற்றிலை பாக்குக் கடைகள்! எத்தனை துணிக்கடைகள்! 'சுதேசி' ஷாப்பு வைப்பதில் கூட போட்டி தலைக்கு மேல் ஓடி விட்டது.

இந்தியாவுக்கு க்ஷேமமேற்படுவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. இந்த தேசத்தினின்று வடிமடைபோலச் செல்வம் பிறநாடுகளுக்குப் போய்க் கொண்டேயிருக்கிறது. அவ்வாறு பணம் போகாதவாறு தேக்கி நம் நாட்டிலேயே புரளுமாறு ஏற்பாடு செய்தால் லக்ஷக்கணக்கான வாலிபர்களுக்குப் பிழைப்புக்கு வழி ஏற்படும். நமது படித்த வாலிபர்கள் வறட்டு ஜம்பத்தை விட்டு கைத்தொழிலில் ஈடுபட வேண்டும். தொழிற்சாலைகளை அதிகமாக்குவது தான் நாட் டின் விமோசனத்துக்கு வழி.

வட்டமேஜை, கூட்டுக் கமிட்டி போன்ற இழ வெண்ணங்களை மறந்து ஸர் ஸாப்ரு நாட்டின் ஆக்க வேலையில் ஈடுபடட்டுமே!

கூட்டுக்கு காய் கறிகள் எவை?

'கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி' என்ற பெயரைக் கேட்டுக் கேட்டு காது புளித்து விட்டது. அந்தக் கமிட்டியில் சில இந்தியர்களை யும் சேர்க்க வேண்டு மென யாரோ சிலர் சொல்கின்றார்களாம். இந்தியர்களைச் சேர்த்தாலும் ஒன்றுதான், சேர்க்கா விட்டாலும் ஒன்றுதான். அழுகிப்போன பூசனிக்காய்களைக் கொண்டு எந்தக் கூட்டு செய்தால் ருசிக்கும்? ஆனால் அந்தக் கூட்டுக்கு இந்தியக் காய்கறிகளையே சேர்க்கக் கூடாதென்று நாக்கை நீட்டி ஆக்ஷேபிக்கின்ற அன்னுந்தைகளும் சீமையில் தோன்றியிருக்கின்றனர்.

"இந்தியப் பிரதிநிதிகள் வர வேண்டியது அனவசியம். வந்தால் ஆபத்தில்லை யென்று சொல்ல முடியாது. பாதுகாப்புகள் விஷயத்தில் இப்போதே அதிகமான அளவு பிரிட்டிஷாராகிய நாம் விட்டுக் கொடுத்து விட்டோம். ஆகவே இனி இந்தியச் சீர்திருத்த மசோதாவில் ஒவ்வொரு வரியையும் பார்லிமெண்டு நெருப்பில் புகுத்தி சோதித்தேயாக வேண்டும். அப்போதுதான் நமது பொறுப்பை நாம் உணர்ந்தவர்களாவோம்" என்று ஸர் ரெஜினுல்ட் மிட்சில்பாங்க் என்று ஒருவன் 'ஸண்டே டைம்ஸில்' எழுதியிருக்கிறுன்.

ஸப்ரூ, கேல்கர், ராமசாமி முதலி போன்ற புடலங்காய்களைப் பாம்பென நினைத்து இந்த மிட்சில்பாங்க் நடுங்குவது கண்டு சிரிப்பு வருகிறது. ஆனால் இந்தியர்களே யில்லாமல், வெறும் வெள்ளையர்களாகவே கூடி இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயித்து விடவேண்டு மெனக் கூறும் அவனது அகப்பாவ புத்தியைக் கண்டிக்காமலிருக்கவும் முடியவில்லை.

பார்லிமெண்டு வார்குவாதத்தை நெருப்புக்கு சமானமாக பேர்படி மிட்சில்பாங்க் சொல்லியிருக்கிறுன். வாஸ்தவமே! 'இந்தியாவுக்கு நன்மை' என்று ஏதாவது ஓர் பகுதி அக்கடுதாசியில் இருந்தால் அதை அடியோடு பார்லிமெண்டு எரித்துப் போடும்.

பிரிட்டிஷ் இராஜீய வாதிகளுக்குள் இப்போ தேற்பட்டுள்ள குழப்பத்தையே இவைகள் காட்டுகின்றன. ஒருவன் சர்ச்சிலைக் கூட்டுக் கமிட்டியில் சேர்க்க வேண்டுமென்கிறுன். இன்னெருவன் ஒரு 'இந்தியனையும் சேர்க்காதே' என்கிறுன். இந்தக் குழப்பத்தை நிவர்த்திப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. 'நியூஸ் கிரானிகள்' பத்திரிகையில் அவ்வழியைச் சுட்டிக் காட்டி ஸ்பெண்டர் எழுதியிருப்பதாவது:—

"இந்தக் குழப்பத்திற்கு முடிவே தோன்றவில்லை. பொறுப்புள்ள இந்தியத் தலைவர்களை விடுதலை செய்வதோடு, ராஜீய விஷயங்களிலும், மத விஷயங்களிலும் மிஸ்டர் காந்தியோடு விவாதிப்பதைத் தவிர வேறு வழி யில்லை."

ஆகா கான் மூளை

பந்தயக் குதிரைகளை வளர்க்கும் ஆகாகானின் மூளை குதிரை மாதிரி வேகமாக ஓடலாகாதா? குதிரை வளர்த்து வளர்த்து அது கூழையாகி விட்டது. பாரிஸில் ஒரு பத்திரிகா மூலை நிருபரிடம் அவர் கூறியிருப்பதாவது:

"மகாத்மா காந்தியால் தொடங்கப்பட்டுள்ள இயக்கத்தைப் பற்றிக் கேட்கின்றீர்கள். இந்தியாவில் ஆங்கிலேயரும் இந்தியரும் இருக்கும் வரை இந்தச் சண்டை இருந்தே தீரும்" என்று கூறியிருக்கின்ருர்.

இந்த ஆகாகானுக்கு மகாத்மா காந்தியின் இயக்கத்தைப்பற்றி அ, ஆ கூடத் தெரியாது. இதே இந்தியாவில் ஆங்கிலேயரும், இந்தியரும் சகோதரர்கள் போல வாழ முடியுமென்றும், அதற்கு முதன் முதலில் இந்த ஆட்சி முறை ஒழிய வேண்டுமென்றும் காந்திஜி சொல்லியிருக்கின்ருர். ஆகவே காந்திஜியின் கருத்து இரு ஜாதியினரையும் ஒற்றுமைப் படுத்துவதாக இருக்கிறது. ஆனல் எப்போதுமே ஜாதிப் பித்தம் பிடித்து அலையும் ஆகாகானுக்கோ ஆங்கிலேயரையும் இந்தியரையும் பிரிக்கும் மனோபாவமே யிருக்கின்றது.

இந்தியாவில் முழுதும் இந்தியர்களே யிருக்க வேண்டும், அல்லது முழுதும் ஆங்கிலேயர்களே யிருக்க வேண்டும். அப்போது தான் சண்டை தீருமென ஆகாகான் சொல்கின்ருர். இந்தியா முழுதும் ஆங்கிலேய மயமாக எப்போதாவது ஆகுமா வென்பதை வாசகர்களே நிர்ணயித்து ஆகாகானுக்குத் தெரிவித்து விடுவார்கள்.

மகாத்மா காந்தியின் இயக்கத்தைப் பற்றி ஏதுமே அறியாத இந்த ஜீவன் வெளி நாட்டில் போய் காந்தி இயக்கத்தைப் பற்றிப் பிதற்றுவதைக் கண்டு நாம் இரக்கப்படுவதை விட வேறு என்ன செய்ய முடியும்?

வர்ணாசிரம தர்மமும் தீண்டாமை விலக்கும்

ஒரு அமெரிக்க கனவான் காந்திஜியைக் கேட்ட கேள்விகளையும் அவைகட்கு மகாத்மாஜி தந்த பதில்களையும் புதிதாய்த் தோன்றியுள்ள "ஹரிஜன்" பத்திரிகை வெளியிட்டுள்ளது. மகாத்மாஜி சொன்னதாவது:—

தீண்டாமையை விலக்குவதால் ஹிந்து மதத்தின் ஜாதிப் பாகுபாடுகளுக்குக் கெடுதி யில்லை. இந்தியாவில் எண்ணிக்கை யற்ற ஜாதிகளிருக்கின்றன. இவை யெல்லாம் ஸமூக ஸ்தாபனங்கள். ஒரு காலத்தில்—ஏன் இப்பொழுது கூட—அவற்றால் எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஸமூகப் பிரிவுகளில் சில அனாவசியமான நிபந்தனைகள் இப்பால் சேர்த்துக் கொள்ளப் பட்டிருப்பதென்னமோ வாஸ்தவம்தான். இவை காலக் கிரமத்தில் அழிந்து விடும். இவற்றால் உலக முன்னேற்றம் தடைப்படுகிறதே யொழிய, பாரமார்த்திக முன்னேற்றத்திற்கு அவை எவ்விதத்திலும் தடையாயில்லை. ஆகவே ஜாதிப் பாகுபாட்டிற்கும், தீண்டாமைக்கு முள்ள வித்தியாசங்கள் முற்றிலும் மாறுபட்டவை. கௌரவம் வாய்ந்த ஒரு சமூகத்தில் தீண்டத்தகாதவனுக்கு இடமில்லை. அவன் ஜாதிப் பிரஷ்டனாகப் பாவிக்கப்படுகிறான். அவனுடைய நிலையிலேயுள்ள அவன் சகோதரர்கள் அவனைப் படுகுழியில் தள்ளி யிருக்கிறார்கள். ஆகவே ஜாதிப் பிரிவினைகளுக்கும், தீண்டாமைக்குமுள்ள வித்தியாசம், ஸ்வர்க்கத்திற்கும், நரகத்திற்குமுள்ள வித்தியாசத்தை யொத்தது.

ஜாதிப் பிரிவினைகளைப் பற்றி இன்னொரு விஷயம். என்னைப் பொறுத்த மட்டில் ஜாதி பேதங்கள், வருணாசிரம தர்ம பேதங்களைப் போன்றவை யல்ல. ஸமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே ஜாதிப் பிரிவினைகள் ஏற்பட்டன; ஆனால் வருணாசிரம தர்மமோ ஹிந்து சாஸ்திரங்களினின்றும் பிறந்தது. இன்றுள்ள ஜாதிகளில் சில அழிகின்றன; நாளைக்குப் புதிய ஜாதிகள் கிளம்புகின்றன. ஆனால் வர்ணங்களோ என்றைக்கும் நான்காகவே இருக்கின்றன. வர்ணாசிரம தர்மத்தில் நான் பூரண நம்பிக்கை கொண்டவன். வர்ணாசிரம தர்மத்தை ஹிந்து மதம் மனித வர்க்கத்திற்கு அளித்த பெரிய வரப் பிரசாதமாகவே நான் கொண்டாடி வருகிறேன். அத்யாத்மிக வளர்ச்சிக்கு வர்ணாசிரம தர்மம் மிகவும் அவசியமானது.

ஆனால் இன்று இவ்வர்ணாசிரம தர்மத்தை மக்கள் பரிசுத்தமாக அனுஷ்டித்து வரவில்லை. வர்ணங்கள் ஏகத்துக்கு குழம்பிக் கிடக்கின்றன. ஹிந்து மதம் ஜீவ சக்தி வாய்ந்த மதமாக உலகில் விளங்க வேண்டுமாயின் நாம் வர்ணாசிரம தர்மத்தின் உண்மைத் தத்துவத்தை யறிந்து, அதை உயிர்ப்பிக்க வேண்டும். ஆனால் தீண்டாமை என்னும் மாசை நீக்கினாலன்றி நாம் வர்ணாசிரமத்தை நிலை நிறுத்த முடியாது. உயர்வு, தாழ்வு என்ற எண்ணங்களை நாம் ஒழித்துப் போட வேண்டும். நான்கு வர்ணங்களிலும் எவையும் உயர்ந்தவை யல்ல; எவையும் தாழ்ந்தவை யல்ல. எல்லாம் சமமே. இந்த சம நோக்கத்துடன் ஒவ்வொன்றும் தத்தமக் கேற்பட்டுள்ள வேலைகளைச் செய்யவேண்டும். மத வுணர்ச்சியுடன் வாழ்வதென்பது சில உரிமைகளைக் கொண்டாடுவதற்காக அல்ல; மத வாழ்வென்பது மனிதன் கடமை. ஆண்டவன் முன்னே பிராம்மணனும், தோட்டி வேலை செய்யும் பங்கியும் ஒன்றே!

அரிசிக்கு சுங்க வரி

ரங்கூன் சட்ட சபையில் சில அரிய தீர்மானங்கள் வர விருக்கின்றன. வரிப் பணத்துக்குப் பதிலாக சர்க்கார், நெல்லை வாங்கிக்கொள்ள வேண்டு மென்று ஓர் தீர்மானம் சொல்கிறது. கூடை நெல் 1½ ரூபாய் விதம் கணக்கிட்டுக் கொள்ளலாமென அத் தீர்மானம் குறிப்பிட்டுளது. இன்னொரு தீர்மானத்தில், சைகோன் அரிசியும், சயாம் அரிசியும் ஏராளமாக இந்தியாவில் இறக்குமதி யாவதால் பர்மாவுக்கும் நஷ்டமேற்பட்டிருப்பதாகவும், ஆகவே அந்நிய அரிசியின் மீது இந்திய சர்க்கார் பலமான சுங்க வரி விதிக்க வேண்டு மென்றும், அப்போது தான் நெல் விலை ஏற்றமடைய வழி ஏற்படு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்படி தீர்மானங்கள் நிறைவேறி அமுலுக்கு வந்தால் இந்திய விவசாயிகளுக்கும் சிறிது சவுகர்ய மேற்படலாம். ஆனால் பர்மா சர்க்காரும், இந்திய சர்க்காரும் செவி சாய்ப்பனவையா?

நமது குறிப்புகள்

சோற்றுக்கு வழி யில்லாவிட்டால்—

சோற்றுக்கு வழி யில்லாது தவிப்பவன் என்ன செய்வது? சர்க்கார் வசம் ஸெக்ஷன் 109 என்று ஒன்றிருக்கின்றது. ஜீவனத்திற்கு வழி யில்லாமல் அலைகின்றவனைப் பிடித்து தண்டிக்கலா மென்றும், சிறையில் போடலா மென்றும் அந்த ஸெக்ஷன் அநுமதி தருகிறது. இந்த ஸெக்ஷனை சர்க்கார் முழுதும் அமுலுக்குக் கொண்டு வர இதுதான் தருணம். இந்தச் சட்டத்தை உபயோகித்து எந்தப் பிச்சைக்காரனைக் கைது செய்தாலும் அவன் அதற்காக தற்கால நிலையில் வருந்த மாட்டான். ஏனெனில் நாட்டின் வறுமை வலுத்திருக்கிறது. 'எச்சிற் கையால் காக்கை ஓட்டாத' கூட்டம் நாட்டில் அதிகமாகி விட்டது. பிச்சைக்காரர்கள் பிச்சையும் கிட்டாது தவிக்கின்றனர். ஆனால் சர்க்கார் மேற்படி ஸெக்ஷனை ராஜீய காரணங்களுக்காக காங்கிரஸ் தொண்டர்களைக் கைது செய்ய பெரும்பாலும் உபயோகப்படுத்திக் கொள்கின்றனரே யன்றி, சமூக சீர்திருத்தத்துக்கு உபயோகப் படுத்துகிறார்களில்லை. என்ன விபரீதம்!

பூவா—தலையா ஆட்டம்!

"பூவானால் நான் ஜெயித்தவன்
தலையானால் நீ தோற்றவன்" என்று

ஒரு பையன் பந்தயம் கூறினனும். அதே மாதிரி இப்போது சில பிரிட்டிஷ் வியாபாரிகள் இந்தியாவினிடம் பேரம் பேசுகின்றார்கள். ஸர் வால்டர் ஸ்மைல்ஸ் என்பவர் பார்லிமெண்டில் ஒரு பிரேரணை கொணர்ந்திருக்கிறார். "இந்தியாவின் தேயிலைக்கு நாம் சலுகை காட்டுவது போல நமது லங்காஷயர் துணிகளின் மீது போடப்பட்டுள்ள சுங்க வரியைக் குறைத்து இந்தியா நமக்கு உதவ வேண்டும்" என்பதே அவரது தீர்மானத்தின் போக்கு. 'பூவானால் எனக்கு ஜெயம்; தலையானால் உனக்கு தோல்வி' என்ற கதையாகவே இதுவும் இருக்கின்றது.

இந்தியத் தேயிலைக்கு சலுகை காட்டுகின்றார்களாம்! நன்று. அதனால் யாருக்கு லாபம்? தேயிலைத் தோட்டங்களையுடைய பிரிட்டிஷ் முதலாளிகளுக்கே லாபமன்றோ? அடுத்தாற்போல லங்காஷயர் துணிக்கு சலுகை காட்டினால் யாருக்கு லாபம்? பிரிட்டிஷ் முதலாளிகளுக்கே லாபமன்றோ? பிரிட்டிஷ் வியாபாரிகளோடு ஏதாவது ஒப்பந்தம் செய்தால் மிகவும் யோசித்தே செய்ய வேண்டும் போலும்!

மோட்டார்-ரயில்-லடாய்!

மோட்டாருக்கும், ரயில்வேயுக்கும் இப்போது 'லடாய்' ஏற்பட்டிருக்கிறது. ஆங்காங்கு சாலைகளில் வாடகை மோட்டார்கள் போட்டி போடுவதால் ரயில்வே கம்பெனிகளுக்கு நஷ்ட மேற்பட்டு விடுகிறதாம். வருஷத்தில் 2 கோடி ரூபாய் நஷ்ட மேற்படுவதாக மதிப்பு போட்டிருக்கிறார்கள். ஆகவே இனி மோட்டார் போக்குவரத்தை சர்க்கார் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டு வரவேண்டு மென ஓர் அறிக்கை விடுவிக்கப்பட்டுளது.

மோட்டாரின்மீது போடப்பட்டுள்ள அபார வரியைத் தாளமட்டாது பஸ்காரர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மோட்டார் வரியினால் எட்டு கவர்னர்—மாகாணங்களினின்றும் சர்க்காருக்கு 360 லக்ஷம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ரோடுகளைச் செப்பனிட சர்க்கார் 250 லக்ஷமே உபயோகிக்கின்றனர். ஒரு கோடிக்கு மேல் லாபம் வருகிறதே அதை சர்க்கார் மறந்து விட்டார்களோ?

ரயில்வே நிர்வாகத்தின் தூண்டுதலுக்குட்பட்டு சர்க்கார், மோட்டார் ஓட்டிப் பிழைக்கும் சாதாரண முதலாளிகளைத் தாக்கலாகாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

ஸ்டாம்பு இரட்டை யாதும்

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து இரண்டு விதமான 'ஸ்டாம்புகள்' தபாலாபீசுகளில் விற்கப்படுமாம். ரெவினியூ ஸ்டாம்புகள், தபால் முத்திரைகள் என இரண்டு விதமாக அவை இருக்குமாம். இப்போது ஸ்டாம்பு ஆக்டின்படி தஸ்தாவேஜுகளுக்கு உபயோகிக்கப்படும் ஸ்டாம்பு, தபாலுக்கும் உபயோகிக்கப்படுகின்றதல்லவா? ஆனால் அடுத்த வருடத்தில் இவை இரண்டு விதமாக பிரிக்கப்படும்.

இம்மாதிரி இரண்டையும் பிரிப்பதால் எந்தெந்த இனத்தில் ஸ்டாம்பு விற்பனை ஆகின்றது என்பதைக் கண்டு பிடிக்க சர்க்காருக்கு உதவியாயிருக்கும். ஆனால் அதன் பயனாக ரெவினியூ ஸ்டாம்பு கட்டண விகிதங்களை உயர்த்துவதற்கு சர்க்கார் முயல்வார்களோ என்ற சந்தேகமும் சிலருக்கு ஏற்பட்டுளது. ஏனெனில் இதே பிரிட்டிஷ் சர்க்கார், ஒரு காலத்தில் அமெரிக்காவில் ஸ்டாம்பு கட்டணத்தை உயர்த்தினார்கள். அந்தச் செய்கையே அமெரிக்க விடுதலைப் போருக்கு ஒரு காரணமாகவும் பின்னால் ஆகி விட்டது. 'ஸ்டாம்பு' சம்பந்தமான சரித்திரம் உலகிலேயே மிக விநோதமானது.

கோளாறு கணக்குகள்

மூன்றும் வருஷத்தில் இந்தியாவின் ஜனத்தொகையைக் கணக்கிட்டார்களல்லவா, அது சுத்தத் தவருன கணக்கு என்பதை ஒருவர் "மாஞ்செஸ்டர் கார்டியனி"ல் அலசுகிருர்.

ஸைமன் கமிஷன் ரிபோர்ட்டில் இந்தியாவில் மொத்தம் 222 பாஷைகள் இருப்பதாக எழுதினுர்கள். ஆனுல் இந்த ஜன கணிதக் கணக்கின்படி 225 பாஷைகளென்று சொல்லப்படுகின்றது. ஸைமன் கமிஷன் வந்த வருஷத்திலிருந்து இரண்டு மூன்று வருஷத்துக்குள் இந்தியாவில் 3 பாஷைகள் அதிகமாய் விட்டனவா? அல்லது எந்தக் கணக்கு தப்பிதம்?

இந்தியாவில் சாதாரணமாக வீடுகளில் ஆங்கிலம் பேசுகின்றவர்களின் தொகை 319 ஆயிரம் என்று கணக்கு சொல்கின்றது. ஆனுல் இந்தியாவிலுள்ள ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் இவர்களின் தொகை 319 ஆயிரத்தை விட பல ஆயிரங்க்ள் குறைவாகவே இருக்கின்றது. ஆகவே ஸூட், தொப்பி, போட்ட எல்லாரையும் ஆங்கிலம் பேசும் கோஷ்டியில் ஜன கணிதக்காரர்கள் சேர்த்து விட்டார்கள்.

எல்லாவற்றையும் விட வேடிக்கை என்னவென்றுல் கல்யாணமான புருஷர்கள் தொகையும், கல்யாணமான பெண்மணிகள் தொகையுமாகும். இந்தியாவில் ஒருவன் பல பெண்களைக் கட்டிக் கொள்ளும் துர் வழக்கம் எல்லாவிடங்களிலு மிருக்கிறதென்னவோ வாஸ்தவம். ஆகவே கல்யாணமான புருஷர்களை விட கல்யாணமான பெண்கள் அதிக மிருக்கலாம். ஆனுல் ஜன கணிதியின் படி கல்யாணமான ஸ்திரீகள், புருஷர்களை விட ஜாஸ்தி யிருக்கின்றனர். அப்படியானுல் அநேக விடத்தில் பல புருஷர்கள் சேர்ந்து ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொண்டு வாழ்கிருர்களென்று கொள்வதா என்ன?

*கல்யாணமான புருஷர்கள்	46.7 %
*கல்யாணமான ஸ்திரீகள்	49.3 %
மனைவியை இழந்தவர்கள்	5.4 %
விதவைகள்	15.4 %

என்று கணக்கு சொல்கின்றது. இந்தக் கணக்குப்படி 'விவாகமான புருஷர்களி'ல் 601,244 பேர்கள் சேர்ந்து 0 மனைவிகளோடு இருக்கின்றுர்களென்று அர்த்தம் போதும்!

இதற்கு முந்தின ஜன கணிதியில் ஆயிரம் பேருக்கு 81 ஆண்களும், 3 பெண்களும் எழுத்து வாசனை பெற்றிருந்தார்களென்று சொல்லப்பட்டது. இந்த ஜனக் கணிதியில் 1000 பேருக்கு 156 ஆண்களும், 29 பெண்களும் எழுத்து வாசனை யடைந்திருப்பதாகச் சொல்லப்பட்டுளது. இந்தியாவின் 352,837,778 என்ற மொத்த ஜனத்தொகையில் 28,131,315 பேர் எழுதப் படிக்கத் தெரிந்த பேர்கள் எனப்படுகின்றது. இதுவாவது வாஸ்தவமா யிருக்குமா?

"ஹரிஜன்" என்ற பெயர்

("ஹரிஜனி"ல் மகாத்மா எழுதியது)

தீண்டத்தகாதவர்களை நான் என் 'ஹரிஜனங்கள்' என அழைத்து வருகிறேன் என்று பலர் என்னைக் கேட்கிருர்கள். ஆங்கில நண்பர்களில் சிலர் அதன் அர்த்தத்தை விளக்கும்படி கோருகிருர்கள். அந்தப் பெயர் என்னுடைய மூளையினின்றும் பிறந்ததல்ல. சில வருஷங்களுக்கு முன்னர் "நவஜீவன்" பத்திரிகையில், தீண்டத்தகாதவர்களுக்கு "அஸ்பர்சியர்" (அதாவது ஸ்பரிசிக்கத் தகாதவர்கள்) என்று பெயர் கொடுத்து எழுதியதற்காக அவர்களில் சிலர் என்மீது குறை கூறினர். வேறு நல்ல பெயர் ஒன்றை யோசித்து எனக்கு அறிவிக்குமாறு அவர்களை அப்பொழுது நான் கேட்டுக் கொண்டேன். குஜராத்தில் முதல் முதல் தோன்றிய கவிஞர் ஒருவர் "ஹரிஜன்" என்ற மொழியை உபயோகித்திருப்பதாகவும், அதையே நானும் பின்பற்றலா மென்றும் ஒரு தீண்டத்தகாத நண்பர் எனக்கு எழுதினுர். அது நல்ல பெயர் என்று எனக்குப்பட்டது. "ஹரிஜன்" என்றுல் தெய்வ அம்சமானவன் என்று அர்த்தம். "ஆபத் பாந்தவன் என்றும் அனுத ரக்ஷகன்" என்றும் உலகத்திலுள்ள ஸர்வ மதங்களும் ஆண்டவனை வர்ணிக்கின்றன. இந்தியாவில் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் 400 லக்ஷம் ஹிந்துக்களை விட அதிக திக்கற்றவர்களோ, மெலிந்தவர்களோ யாரிருக்கிருர்கள்? ஆதலால் தான் இவர்களை நான் தெய்வ அம்சங்களாகக் கருதுகிறேன். 'தீண்டத் தகாதவர்கள்' என்ற அவச் சொல்லை எதற்காக நாம் உபயோகிக்க வேண்டும்? ஜாதி ஹிந்துக்கள் தங்களது மனமாற்றம் காரணமாகத் தாங்களே தீண்டாமையை ஒழித்துவிடும் காலத்தில் நாம் எல்லோரும் ஹரி ஜனங்கள் என அழைக்கப்படுவோம். ஏனெனில் அப்பொழுது ஜாதி ஹிந்துக்களுக்கும் ஈசுவர கிருபை ஏற்பட்டு விடும்.

நமது கிளிஞ்சல் குவியல்

சென்னையில் சுயேச்சை தினத்தன்று கைதியான தொண்டர்களில் ஏழு பேருக்கு தலா 3 மாதம் தண்டனை.

சென்னை தேவராஜ முதலித் தெருவில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக இருவர் கைதியாயினர்.

சென்னை மாகாணத்தில் ஜனவரி மாதத்தில் சட்ட மறுப்புக்காக தண்டிக்கப்பட்டவர் 80 பேர். சிறையிலிருப்பவர்கள் 1051 பேர்.

சேலத்தில் காந்தி கார்டு, கவர் விற்றதற்காகவும், இரண்டு தபால் பெட்டிகளைப் பூட்டியதற்காகவும், சித்தப்யா என்னும் தொண்டர் கைது செய்யப்பட்டார்.

கள்ளிக் கோட்டை இம்பீரியல் பாங்கை மறியல் செய்த 12 பேர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மன்னார்குடியில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ரமணிக்கு 6 மாதமும், 100 ரூபா அபராதமும், கேசவ மேனனுக்கு 6 மாதம் கடுங்காவலும் தண்டனை.

12உ யன்று நாமக்கல்லில் தெருக்களிலும், கோபுரத்திலும் தேசியக் கொடிகள் பறந்தன. பகிஷ்கார விளம்பரங்களும் காணப்பட்டன.

ஆமதாபாத்தில் காந்தி தினத்தைக் கொண்டாட துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக 8 பேர் கைதியாயினர்.

பெஷாவாரில் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் இருக்க வேண்டுமென்று பலருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

அடுத்த காங்கிரஸை கல்கத்தாவில் மார்ச்சு மாத மத்தியில் கூட்டுவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சென்ற வாரத்தில் இந்தியாவிலிருந்து அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதியான தங்கத்தின் மொத்த மதிப்பு ரூ. 1,44,03,397.

அலகாபாத்தில் அழிந்து போன பயிர்களுக்கு வரி வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்பி நடத்திய ஊர்வலத்தில் 15 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹரிஜன விமோசனம்

பரோடாவில் 15 கோயில்களும், ஐக்கிய மாகாணத்திலுள்ள ஜடோடா என்னுமிடத்தில் ஒரு சிவன் கோயிலும் திறக்கப்பட்டிருக்கின்றன.

அமிருதஸரஸில் ஒரு கிணறும், டில்லிக் கருகிலுள்ள 2 கிராமங்களில் 4 கிணறுகளும், புதிய டில்லியில் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளன.

ஒரிஸா ஜில்லா, அங்குல், ஜெப்பூர் தாலுகாக்களில் 2 இராப் பள்ளிக்கூடங்களும், பம்பாயில் இரண்டும், சென்னை ராயப்பேட்டையில் ஒன்றும், ஜான்ஸியில் ஒன்றும் ஏற்பட்டுள்ளன.

குஜராத்தில், தோஹாட் என்னுமிடத்தில் மணிலால் துர்லாப்ஜி என்பவர் ஒரு தோட்டியைத் தமது குமாஸ்தாவாக வைத்துக்கொண்டிருக்கிறார்.

எல்லா பள்ளிக்கூடங்களிலும் ஹரிஜனப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு மோராடாபத் முனிசிபல் போர்டு உத்தரவிட்டுளது.

—"ஹரிஜன்" பத்திரிகை

மதுரை நகர் மேலச் சேரியில் ஹரிஜனங்களுக்கென ஓர் பள்ளிக்கூடம் திறந்து வைக்கப்பட்டது.

"ஆலயப் பிரவேச மசோதாவைப் பற்றி எவ்வித அபிப்பிராய மிருப்பினும், அதனை இக் கூட்டத்திலேயே எடுத்துக் கொள்ள ஒன்று சேரும்படி" இந்தியா சட்ட சபை மெம்பர்களுக்கு மகாத்மா செய்தி அனுப்பியிருக்கிறார்.

ரங்கய்யரின் ஆலயப் பிரவேச மசோதாவானது மெஜாரிட்டியாரின் தீர்மானத்தின் பேரில் ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் விடலாமென்று அர்த்தம் படக் கூடியதாக இருப்பதாலும், ஆலயங்களில் தீண்டாமையை அநுஷ்டிப்பது பாவமெனக் கூறவில்லையாதலாலும் ஷ மசோதா திருப்தி யளிக்கவில்லை யென்றும், வர்ணாசிரமத்தை அடிப்படையாகக் கொண்ட மதம் ஏற்றதல்லவென்றும் டாக்டர் அம்பேத்கார் ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்.

உபவாஸ வெற்றி

சிறையில் தோட்டி வேலை செய்ய சர்க்கார் அனுமதித்து விட்டதினால் அப்பாசாகிப் பட்டவர்தன் தமது உண்ணா விரதத்தை நிறுத்தி விட்டார்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras